உ

சிவமயம்

கணேஜாயநம:

இவை

மன்னார்குடி தாலூகா

# திருக்களரென்னும் நகரில் கும்பாபிஷேக வைபவத்தைப்பற்றிக்கூறும்,

# கும்மியும் நொண்டிசிந்தும்

மன்னார்குடி தாலூகா ரிஷியூர் அ. நடராஜ முதலியாரவர்கள்
கேட்டுக்கொண்டதின் பேரிலும்

ஷையூர் அ. பக்கிரிசாமி வாணதிரையரவர்கள்
கேட்டுக்கொண்டதின்பேரிலும்

ரிஷியூர் பாரத பிரசங்கி

கூ. அருணாசலக்கவிராயரவர்களால்

இயற்றியது

மன்னார்குடி சப்பக லெட்சுமி விலாச பிரசில்
விரோதுகிருது௵ சித்திரை௴ 15௳
அச்சிடப்பட்டது.

1911

விலை பைசா 6,

OFFICE OF THE REGISTRAR OF ...
30 MAY 1911
MADRAS.

520
II 1911

Q23:38.2193M1
N4
172468

172468

உ

சிவமயம்

# விநாயகர் துதி.

## வெண்பா.

1. இன்சுவையாய் யாரமுதாய் யார்க்கும் பகுத்தளிக்குஞ்
செஞ்சுடராய் மின்றிலகுஞ் செஞ்சடையான்
வஞ்சியுடன் கூடிமருவிய தோரின்பமதால
ஐந்து பதத்தைங்கரன் தாளபயம்

## கலித்துறை.

2. சீர்கொண்டு திருவருள் மதிகங்கை சடிலத்தன்சிவனருளால்
பேர்கொண்ட பக்தர்கள் முத்தர்கள் சித்தர்கள்பேசிடவும்
கார்கொண்டு மும்முறை பெய்யவும் திருக்களர்கபாலியை
த்தான்
உளர்கொண்டிலங்கும் தேவாதிதேவர் பக்திக்குருகிநைவார்

## கும்மி.

1. கும்மியடி பெண்கள் கும்மியடி
யிருகொங்கை குலுங்கவே கும்மியடி
நம்மையாளும் திருக்களரீசனை
நாடிக்கும்மியடியுங்கடி.

2. சீர்கொண்டிலங்குந் திருக்களர் தன்னில் வாழ்
தேவாதி தேவனைத்தான் துதித்து
கார்கொண்டமேனிக் கண்ணனும் கமலனும்
காணாத பாதத்தைக்காணுங்கடி.

3. எங்கும் நிறைந்த பரம்பொருளா[illegible]
இஷ்டம் வைத்தவர்க்கன்பு[illegible]சய்வார்
தங்கும் பாரிஜாதவனேசுரை
தாண்டிக்கும்மியடியுங்கடி.

520
II - 1911

4. மாமனாகி வந்து வழக்குரைத்தவண்டி,
வாணிச்சி பிட்டு தின்றவண்டி
காமனையெரித்து காலனை உதைத்து
கலலாலடியும் பட்டவண்டி.

5. அன்பர்கள் உள்ளமே கோயிலாக்கொண்டவன்
ஆரூரனுகா தூது சென்றான்
மண்ணும் மரமும் புனலும் வன்னியும்
வாயுவுமாக நிறைந்தவண்டி.

6. இப்படியான பரப்பிர்மஸ்த்துவாம்
ஏகமாய் நின்ற பரம்பொருளாம்
செப்பியவரைத் தினம் தினம் துதித்துத்
தேடிக்கும்மியடியுங்கடி.

7. அண்டங்கள பிண்டங்கள் எங்கும் நிறைந்திடும்
அம்பாள் அமுதவல்லியைத்தான்
கண்டவுடன் பதம்பணிந்து போற்றிக்
கருத்துடன் கும்மியடியுங்கடி.

8. தேவர்கள் காணாவமுதவல்லி அவள்
சித்தர்கள் போற்றிடும் புண்யவதி
பாவிகள் கண்ணுக்கு காணமுடியாத
பவளவல்லியைப் பாடுங்கடி.

9. வேலும் மயிலும் சடாக்ஷரமும் அந்த
விண்ணவர்கோன்மகள் ஒரு புறமும்
பாலும் பழிக்கும் மொழிபகர் வள்ளியும்
பன்னிருகரமும் பாருங்கடி.

10. வாரமும் மாதமும் நாழிகையும் சதா
வாழ்த்தி துதித்து அன்பர்கட்கு
சாரமும் ஞானசாகரமும் வர
தயவு செய்வாராம் சாற்றுங்கடி

11. நல்லோர்கள் உள்ளத்தில் நின்றவண்டி அந்த
ஞானசம்பந்தராய்வந்தவண்டி.

நல்லார்கள் உள்ளத்தில் நில்லாண்டி அருள்
காக்ஷி கொடுக்கும் கந்தனடி.

12. அறுபதினாயிரம் முனிகளுக்கும் அந்த
அற்புதமான ரிஷிகளுக்கும்
பெருமையுடன் பஞ்சாட்சர மந்திரம்
பிரபலமாக மொழிந்தவனடி,

13. இந்த விதமுள்ள சண்முக நாதனை
யெப்போதும் தோத்திரம் செய்து நின்றால்
சந்ததமும் அருள் கிரிபை செய்வாரென்று
தாண்டிக்கும்மியடியுங்கடி.

14. காவிரி நதிகள் இருபுறமும் சூழ
கந்தமாதனத்தார் சூழ
பாவிகள் பாவத்தை போக்கும் திருக்களர்
பரமனை துதித்துப்பாடுங்கடி

15. சோலைகளும் அந்தத்தடாகக்கரையும்
சொல்லமுடியாத புஷ்பங்களும்
மாலையில் வேதியர் முனிவர் கூட்டம்
மகிமை பாரடி மங்கையரே

16. ஆனந்தத்தாண்டவமாடுமீசன்
அற்புத க்ஷேத்திரம் எட்டினுள்ளே
கானங்கள் பாடும் திருக்களரீசன்
கருணை செய்வாராம் கண்மணியே.

17. சப்தரிஷிகளில் தான் சிறந்த
துருவாசனெனும் முனிபுங்கவர்கு
எப்போதும் சாபம் கொடுக்க கொடுக்க
இன்பக்கிருபையும் தானளித்தார்.

18. ஆரூர்மறைக்காடு பூவனூர் பாதளம் அருமையான
திருத்தண்டலையும்
ஈருடன் நான்கு புறத்தினில் சூழவும்
திருக்களர் தெரிசனம் பாருங்கடி.

172468

19. களிகற்பகம் பாரிஜாதம் மருமந்தாரம் முல்லை
அசோகுடனே
வளமாயோங்கும புட்பவகைகளை மகிழ்ந்து
கும்மி அடியுங்கடி

20. கருமவினைகள் போக்கிடும் ஈசன் கடாக்ஷிக்க
நேரமிது தாண்டி
துருவாசர் முயற்சையால் ஆலயம்
தொன்று தொட்டு நிறைவேறினதாம்

21. சித்திரை பவர்ணமி நாளதிலுத்சவம்
தேடிச்சகலரும் தான்வணங்க
பக்தியுடன் தேவகணங்கள் முனிகள்
பக்குவமாகத் துதிப்பாராம்

22. இவ்விதமாகத் துருவாச மாமுனியெப்போதும்
உற்சவம் செய்து வந்தார்
பவ வினை நீங்கா கலியுகமானதால் பார்க்காமல்
ஜீரணமாச்சுதடி

23. மதுமலர் சோலையும் வாவியும் கூபமும்
மண்டலத்தார்க்கு உதவி செய்யும்
புதுவயல் தன்னில் உற்பவமான புண்யவரினை
போற்றுங்கடி.

24. வாயிலோரைந்து புலன்தனை வென்றுமாசற்ற
ஞானதேசிகராய்
கோயிலூர் மடம் விளங்கவே நின்றிடும்
குஞ்சிதபாதத்தை கூறுங்கடி

25. செப்ப ஒண்ணு அடியார்களுக்கமுதம் செய்துமே
ஞானவிதத்தையெல்லாம்
எப்போதும் அருள்மூர்த்தியாய் விளங்கும்
யீசனைத்துதித்துக் கும்மியடி

26. பாரதினில் சிவபக்தர்கள் எத்தனை
பக்குவமானவர் எத்தனைபேர்

வீரசேகரஞான மூர்த்திக்கு
வினுக்கள் சொல்ல முடியாது.

27. இப்படியான அருள்கிலே பெற்றிடும்
எம்பிரான் கோவிலூர் சுவாமியினுல்
செப்பமுடியாத திருக்களர் திருப்பணி
செய்து முடித்து மனமகிழ்ந்தார்

28. மாடமும் கூடமும் கோபுரமும்
நாலு வாசல்படியும் விமானமுடன்
ஆடகவர்னமாய் எங்கும் புதுப்பித்தார்
ஆச்சரியம் சொலலக்கேளடியே.

29. ஆயிரக்கால் உள்ள மண்டபமாம்
அதில் அர்த்த மண்டபம் கூட உண்டாம்
ஞாயிறு சந்திரன் கூடிபுலாவிடும்
நகரில் என்றுமே பாருங்கடி

30. அற்புதம் அற்புதம் மகா மண்டபம்
அமுதவல்லித்திருமண்டபமும்
கற்பகோடி காலம் பார்க்சமுடியாத
காகூஷியும் கேட்டுக்களியுங்கடி

31. பாரிஜாதவனயிசுரர் இருக்கும்
பண்பான மண்டபம் தான் பார்த்து
ஆரியராலும் தேவராலும் ரிஷியாராலும்
சொல்லமுடியாது.

32. வேதியர் கூடியே பிரணவமந்திரம்
விமரிசையாக நடத்துறதும்
கோதிகுழல் அபிரும அம்மையை
கும்பிட்டுக்கும்மியடியுங்கடி

33. யாகசாலையும் லிங்கங்கள் தோரும்
எங்கெங்கும் மருந்து பூசுவதும்
வாகை மலரும் ஸ்தூபி தெரிசன
மகிமையும் பார்த்து மகிழுங்கடி

34. அன்னதானமுதல் முப்பத்திரண்டறம்
அருமையாகச்செய்து தான் முடித்து
வர்ணமுள்ள லிங்க மூர்த்திக்கபிஷேகம்
வகை வகையாக செய்து கந்தார்.

172468

35. நாலுகாலுள்ள் மண்டபமாம் அதில்
நவரத்ன கசித பொற்சபையாம்
பாலுபோல் மொழி பகர்ந்திடும் பத்தினி
பக்குவமாகப்பரவிஙிற்பாய்

36. சித்திரை மாதம் இருபத்திரண்டாம் தேதியில்
நடக்கும் வைபவத்தை
அத்தியும் தோலும் நரம்பும் உள்ளுருகி
அன்பாய் போற்றி அடியுங்கடி.

37. நாவலர் போற்றிடும் புண்ணியவான்களும்
நாமகள் பொற்சபை இங்கிதமும்
பாவலர் போற்றும பரமசிவத்தை
பக்தியாய்ப் பாடியடியுங்கடி

38. இந்தவிதமாகத்திருக்களர் வைபவம்
யெடுத்துச்சொன்னேன் திருக்கும்மிதனில்
சந்தோஷமாகச்சிந்துதன்னிலே
சல்தியில் சாற்றுவேன் கேளடியே

39. மங்களவல்லியே ஸ்நானங்கள் செய்துமே
மார்க்கமாய் கோவிலுக்குள் புகுந்து
பங்கமில்லாமல் திருகளரீசனை
பாடிக்கும்மியடியுங்கடி.

நொண்டிச்சிந்து.

திருக்களர் நகர் பெருமை நான் செப்புகிறேன் கேளடி உச்சிதமாக

மருப்படா சோளநாட்டில் காவிரி யகிமையாய் நான்குபுறஞ் சூழ பெருமையாய் நடராஜன் ஆடும்

பிரபலயக் கூத்துக்குகந் தவராம் துருவாசமாமுனிவர் சதா தோத்திரம் செய்து தவம்பெற்று

பிரதிஷ்டை தானும் செய்து அதன் பெருமையை யாவருக்கும்விரித்துரைத்தார் கந்தன்வடிவேலன்

ஷண்முகன் கந்தமாதனரிஷிகளுக்கு சந்ததம்நிறை வேற பஞ்சாக்ஷரத்தனுக்கிரகம் தானும் செய்தார்

வெகுகாலமானதினுல் திருக்கோவில் விணுய் ஜீரணமாச்சுதென்று

பலரும் தான்பார்த்து பரிதாபப் பட்டுக் கொண்டே மனதை விட்டுமேநின்றார்

ஆவதும் அழிவது மேயார்க்கும் அகப்படாதென்று மறைசாற்றிடவே

பூவனூர் பதிவாழும் நல்லபொருமையும் சீர்மையும் பெரும் புகழும் சொலலி முடியாத

பக்தியில் தோன்று தொட்டு நிறைவேறினவர் பல்லோகளும் வணங்கும்

அந்த பண்பான ஞசுமுதலியாரும் கோயிலூர் பதிவாழும் ஞானகுருமூர்த்தி வீரசேகரரும்

இருவரும் தான் சேர்ந்து என்றும் அழியாத் திருப்பணியாய் மயனைதானழைத்து

இந்த மண்டலத்தில் இல்லாத வேலையும்செய்தார்

அர்த்தமண்டபம் கூட்டி வெகு ஆச்சரியமாகவே தான்சேர்த்து

மகாமண்டபம் நாலு வாசலும் கோபுர மாளிகையும் பத்திர புட்பங்களும்

யாகசாலையும் தோட்டமும் வீதிகளும் சித்திகள் தானடைந்த பெரியோர் சேவையும்

இரதப் பெருமையுடன் முத்திக்குரித்தான வேதியர் மும்மூட்சுபதத்தைதானினைதது

எக்யமந்திரமும் தேவர்க்கின்பமுடன் அவிர்ப்பாகம் தானும் கொடுத்து

அன்னதானம் பூதானம் யெல்லாம் ஆனந்தமாகவே தானியற்றி

சித்திரையாமதியில் அந்தமேதி யிருபத்திரண்டிலேதான்

சுக்கமுடன் கும்பத்துக்கு அபிஷேகம தொடங்குவர் பலருமே தெரிசிக்கவும அம்பவிழுங் பூங்கோதை

சிவவரம் பிரசாதமருள் தான்பெறவே சல்தியில் தானெழுந்து ஸ்நானம்

சந்திசெபயோக நிட்டை தான்புரிந்து பல்லோகளும் காண

திரு வீதி பக்குவமாய் வரும் அஷ்டமூர்த்தி வடிகை

கண்டு மனமகிழ்வாய் யாவர்க்குள் கவலை யுடனெடுத்து உரைசெய்வாய்வருவார்விடையேறிசிவத்தைவாழ்த்திதுதித்து மன மகிழ்வாய்

கண்ணேகண் மனியேநானுனக்குகருணையுடன்மொழிந்தேனிதுசேதி தஞ்சை ரிஷியூர் வாழ் தாசன் அருணாசல தேசன்செப்பினேன் படித்தோர கேட் டோர்கள் இதைபக்குவமாம்பிறருக்குச் சொன்னவர்கள் கேட்டோர்கள்

வாழி வாழியதே

பரமன் மலரடி யென்று வாழியதே நன்று நன நனம்

172460